எம்.சி.ஓ.பி.281/2014 குமார் 13.01.2020

முதல் விசாரணை தொடர்ச்சி

திருச்சி போக்குவரத்து காவல்நிலைய கு.எண்.30/2013ன் முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1. ஓட்டுனர் உரிமம் நகல் ம.சா.ஆ.2. ஆகியவற்றை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கு.வி.

எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது. அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளரையும், காப்பீட்டு நிறுவனத்தையும் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கிற்கு அவசியமான தரப்பினரை சேர்க்காததால் வழக்கு குறைபாடு உடையது என்றால் சரியல்ல. நான் மனுவில் சொல்லியுள்ளது போல் விபத்து நடக்கவில்லை என்றும், பின்னால் வரும் வாகனத்தை கவனிக்காமல் சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்துக்கு என்னுடைய கவனக்குறைவு தான் காரணம் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் என்றும், அவை பரிபூரணமாக குணமாகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்து காயங்களினால் எனக்கு நிரந்தர ஊனமோ, வருமான இழப்பும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீட்டுத்தொகை அதிகமானது என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/குமார்,
ஒம்/C.ஸ்ரீதர்,
சார்பு நீதிபதி,
குளித்தலை.